# நம்பிக்கைத் துரோகமும் நலமே பயக்கும்!



முனைவர் இ.ஜே.சுந்தர்

அவள் பார்வையிழந்த, திக்கற்ற ஓர் இளம்பெண். அவள் மேல் பரிதாபம் கொண்டு, மனிதநேயங்கொண்ட இளைஞன் ஒருவன் அவளுக்கு இயன்ற உதவிகள் அனைத்தும் செய்து வந்தான். அவனுடைய தன்னலமற்ற பண்பு அவளைக் கவர அவள் அவனைக் காதலிக்கத் தொடங்கினாள். காதலை அவனும் ஏற்றுக்கொண்டான். என்றைக்காவது ஒருநாள் பார்வை கிடைத்தால் அவனுடன் உலகெங்கும் சுற்றிவர வேண்டுமென்பது அவளுடைய தீராத ஆசை. அந்த நாளும் வந்தது. கண்தானம் செய்ய முன்வந்த ஒருவர் உதவியால் அவள் முழுப் பார்வை பெற்றாள். சிகிச்சை முடிந்து, சில நாள்களுக்குப் பின் கண்கட்டைப் பிரிக்கும் போது அவள் எதிரே அவன் ஆசை ஆசையாய் நின்றான். அவனைக் கண்ணாரக் காண அவள் கண்களைத் திறந்தபோது அதிர்ச்சியடைந்தாள். காரணம் அவனும் பார்வையிழந்தவன். ஒரு கணத்தில் தன் காதலைத் தூர எறிந்தாள். 'நாம் திருமணம் செய்து கொள்ளலாமா?' என்று கேட்ட அவனை அவள் முற்றிலும் நிராகரித்தாள். அவன் கண்ணீருடன் விடைபெற்றபோது ஒரு கடிதத்தை அவளிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். அதில் இருந்த வரிகள், ''அன்பே, என் கண்களைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்'!''

இதயத்தைச் சம்மட்டியால் அடிப்பதுபோன்ற நிகழ்வுகள் இதுபோல, நாளும் நடந்து வருகின்றன. நம்பிக்கைத் துரோகங்கள் காதலர்களிடையே மட்டுமன்றி, கணவன் மனைவியிடத்தும், நெருங்கிய உறவினரிடையேயும், நெஞ்சார்ந்த நண்பர்களிடமும், பல்லாண்டு நம்மோடு பணியாற்றுவோரிடமும், நம்மை அண்டி வாழ்வோரிடமும் கூட நடைபெறும்போது நம்பிக்கை வறட்சி வாழ்க்கையின் ஓரத்திற்கே நம்மை விரட்டுகிறது. மொத்தத்தில் மனித இனத்தின் மேலேயே வெறுப்பு ஏற்படுகிறது.

நம்பிக்கைத் துரோகங்கள் வரலாறு முழுவதும் வலம் வந்தபடிதான் இருக்கின்றன. இயேசுநாதரை அவர் சீடர் யூதாஸ் காட்டிக் கொடுத்தார். அவர் மட்டுமன்று தலைமைச் சீடரான இராயப்பரே இயேசு சிலுவையைச் சுமந்து செல்லும்போது ''இவரை யாரென்றே அறியேன்'' எனப் பயந்துகொண்டு சத்தியம் செய்தார். துரோகம் செய்தவர்களை இயேசு பொறுத்தார். இதே இராயப்பர்தாம், பின்னால் மனம் மாறி, இயேசுவுக்காகத் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு மரணத்தை ஏற்றார்.

துரோகங்களைச் சந்திக்காதவர்களே இல்லை. மனித இயல்பான துரோகத்தை நிறுத்த முடியாது. இதற்காக நாம் அனைவர்மீதும் அவநம்பிக்கை கொள்ள வேண்டியதில்லை. ''மானிடத்தின் மேல் அவநம்பிக்கை கொள்ளாதீர்கள்! மானிடம் ஒரு மாக்கடல். அதில் சிறு துளிகள் அழுக்காய் இருப்பதால் கடல்முழுவதும் அழுக்காவதில்லை'' என்று காந்தியடிகள் இந்த அவநம்பிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார். துரோகம் செய்பவர்கள் சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக எல்லாரையும் நம்பாமல் செயல்பட முடியுமா? பலரை நம்பி சிலரிடம் ஏமாந்தவர்களைவிட யாரையும் நம்பாமல் இருப்பவர்கள் ஒன்றும் பெரிதாகச் சாதிப்பதில்லை.

துரோகத்தை வெறுத்தாலும், துரோகிகளை வெறுக்காதீர்கள். நீங்கள் துரோகம் என நினைப்பதுகூட தவறான புரிதலாக இருக்கக்கூடும். துரோகிகளைத் தண்டிக்க அவசரப்படாதீர்கள். கெட்டவர்களாக யாரும் படைக்கப்படுவதில்லை. கெட்டவர்களிடமும் அருங்குணங்கள் மறைந்திருக்கும். துரோகிகளை மன்னிக்கும்போது, அவர்கள்

உங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, தவற்றையுணர்ந்து, உங்கள் உயிர்காக்கும் உற்ற நண்பர்களாக மாறக்கூடும்.

நம்பிக்கைத் துரோகங்கள் அதிர்ச்சிக்கு உரியனவல்ல. உங்களுக்கு வாழ்வின் நுட்பங்களை உணர்த்த, இயற்கை நம்பிக்கைத் துரோகம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். எதையும் தாங்கும் இதயத்தைப் பெற நமக்கு நம்பிக்கைத் துரோகங்களே பயிற்சியளிக்கும். ‘‘இவ்வுலகில் இன்பம் மட்டுமே நிலைத்திருக்குமாயின் வீரமாகவும், பொறுமையாகவும் இருக்கக் கற்க மாட்டோம்‘ என்பார் ஹெலன் கெல்லர்.

‘எனக்கு யாரும் நம்பிக்கைத் துரோகம் இழைக்கமுடியாது. அப்படி இழைத்தால் துரோகங்களைத் துன்பமாக எடுத்துக்கொள்ளாமல் சவாலாக எடுத்துக்கொண்டு இழைத்தவர்கள் முன் தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டுவேன்’’ என்ற உணர்வு பெற்றால் நம்பிக்கைத் துரோகங்கள் கூட நமக்கு நன்மையே பயக்கும். துரோகம் நமக்கு அளவற்ற வேதனையை அளிக்கிறது. எனவே நினைவுக்காட்டில் திரியும் வேதனை மிருகங்களை எளிதில் பழக்க முடியாது என்பது உண்மையே. எனினும் பயிற்சியாலும், மனஉறுதியாலும்,உடன்பாட்டு எண்ணங்களாலும் இதனை வெல்வது நிச்சயம் சாத்தியமாகும்.

தம் மீது நம்பிக்கை வைக்காமல், பிறர்மீது எதிர்பார்ப்பை வைத்துவிட்டு, எதிர்பார்த்தவை நடக்காமல் போனால், அடுத்தவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டார்கள் எனப் புலம்புவோர் உளர். தம் மீது ஆழமான, அழுத்தமான நம்பிக்கை வைப்போரை நம்பிக்கைத் துரோகங்கள் தீண்டுவதில்லை.





## நம்பிக்கைத் துரோகத்தை எதிர்கொள்ள வழிகள்:

1.நம் பலவீனங்களுக்காகப் பிறர் நம்மை வெறுப்பதில்லை. நம் பலம் ஏற்படுத்தும் பொறாமையாலும், இயலாமையாலும்தாம் நம்மை வெறுக்கிறார்கள். நெருங்கியவர்களே நம்பிக்கைத் துரோகிகளாகிறார்கள். எனவே, உங்கள் பலத்தைப் பொறாமைப்படுமளவு விளம்பரப்படுத்தாமல் அடக்கமாகச் செயல்படுங்கள். நண்பர்களுக்கு மட்டுமன்றி உங்கள் மேல் வெறுப்பு காட்டுவோருக்கும் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். இதனால் துரோகம் செய்ய நினைப்போர், தயங்குவர்.

2. இயலாமை, ஆதரவற்றநிலை ஏற்படும்போது சில மனிதர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நண்பர்கள் முதுகில் குத்தத் தயங்குவதில்லை. இத்தகைய சூழலில் எச்சரிக்கையாக இருந்து துரோகம் இழைக்க வாய்ப்புள்ளோரை வழிமாற்றுங்கள்.

3.''என்னை நம்புங்கள்'' என்று வலியச்சொல்வோரை நம்பாதீர்கள். தம்மைப் பற்றித் தம்பட்டம் அடித்துக்கொள்வோரும் ஆபத்துக்குரியவர்களே. நீங்கள் வெளிப்படையாக, எதார்த்தமாகப் பேசுவதைக் கவனித்துவிட்டு நீங்கள் பேசியதையும், பேசாதையும் சேர்த்துப் பொதுவில் விடும் துரோகிகள் உளர். இத்தகையோர் உள்ள இடங்களில், உங்கள் இதயத்தைச் சட்டை மடிப்புக்குள் வைக்காதீர்கள். வீண்பேச்சை நிறுத்துங்கள்.

4. துரோகத்தால் ஏற்படும் தாங்கமுடியாக் கவலையை நீக்க மடை மாற்றமாக, இனிய இசையைக் கேட்பது, நகைச்சுவை காட்சிகளைப் பார்ப்பது, புதிதாக ஒரு மொழியையோ, இசைக்கருவியையோ, ஒரு கலையையோ கற்பது முதலியன நல்ல பயனளிக்கும். கவலைப் பறவைகள் இனிய வாழ்க்கை மரத்தில் பழுக்கும் பழங்களைக் கொத்தினாலும் கலங்காது, பழத்தைப் பழுக்கவிட்டுக் கொண்டேயிருங்கள். அழுதுகொண்டே பிறந்தாலும், போகும்போது சிரித்துக் கொண்டே போக வேண்டாமா?

# அச்சமில்லை!

சீறிவந்த சிறுத்தையைப் பார்த்து விலகியோடின விலங்குகள். பசு ஒன்று மட்டும் பதறாமல் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது. ''உயிர் வாழ ஆசையில்லையா?'' சீறியது சிறுத்தை. ''உன் சீற்றம் வீரத்தின் வெளிப்பாடல்ல. பசியைக்கண்டு பயப்படுகிறாய்.



பயத்தில் அலறுகிறாய்.

எனக்குப் பசித்தால்தான் அமைதியாக மேய்வேன். நீ என்னைக் கொன்றால் அமைதியாகச் சாவேன். எனக்கு ஓட முடியாது. எனவே உயிர் பயமும் கிடையாது. நீ சீறுவது பசியாலும் பயத்தாலும் என்று எனக்குத் தெரியும்,'' பதறாமல் சொன்னது பசு. சிறுத்தை நடுங்கியது. காட்டுக்குள் திரும்பியது. அச்சமற்ற நிலையில் இருப்பவர்களை யாரும் மருளச் செய்ய முடியாது.





பிறரின் குறைகளிலே
நாட்டம் கொண்டு
எப்போதும் புறம் கூறிக்
கொண்டேயிருப்பவன்
தன் குறைகளைத்தான் வளர விடுகிறான்.
- புத்தர்